IJM

**இன்டர்நேஷ்னல் ஜஸ்டிஸ் மிஷன்**

03.10.2014

பெறுநர்

அனுப்புனர்
டி.ரேச்சல் பிரசன்னா
சமூக தொடர்பு மேலாளர்
இன்டர்நே'னல் ஜஸ்டிஸ் மி'ன்
சேத்துபட்டு, சென்னை.

பொருள்: **கொத்தடிமை முறை ஒழிப்போம் என்ற மாநில அளவிலான விழிப்புணர்வு பிரச்சாரத்திற்காக ஐ.ஜே.எம் அமைப்புடன் இணைந்து செயல்படுவது குறித்த ஆவண கடிதம்-**

மதிப்பிற்குரிய **தென்றல் இயக்கம்** அவர்களுக்கு,

தமிழ்நாட்டை கொத்தடிமை முறை இல்லாத மாநிலமாக மாற்றுவதற்கான முயற்சியில் இன்டர்நே'னல் ஜஸ்டிஸ் மீன் (IJM) அமைப்புடன் இணைந்து செயல்படுவதற்கு எங்களின் மனமார்ந்த நன்றிகள். இந்த பிரச்சாரத்தில் உங்களின் ஒத்துழைப்பை ஆவலுடன் எதிர்பார்க்றோம்.

கொத்தடிமை முறை ஒழிப்போம் என்ற பிரச்சாரம் கொத்தடிமை முறையால் பாதிக்கப்பட்டவர்களை மீட்க, சமூகத்தின் அனைத்து தரப்பட்ட மக்களையும் ஒன்று திரட்டும் ஒரு தொடர் நிகழ்ச்சியாகும். கொத்தடிமையில் சிக்கியுள்ளவர்களை மீட்கவும், இக்குற்றங்கள் நடைபெறாமல் தடுக்கவும், கொத்தடிமை தொழில்முறைக்கு எதிராக ஒன்றுபட்ட குரல் எழுப்புவதே இப்பிரச்சாரத்தின் நோக்கம்.

கொத்தடிமை தொழிலாளர் முறையை முடிவுக்கு கொண்டு வருவதில் நம் ஒவ்வொருவருக்கும் பங்கு உண்டு. நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயல்பட்டால், தமிழ்நாட்டை கொத்தடிமை இல்லாத மாநிலமாக நம்மால் உருவாக்க முடியும்.

கீழ்வரும் பகுதியில் இந்நிகழ்விற்கான எங்களின் எதிர்பார்ப்புகளை விவரித்துள்ளோம். இதை நீங்கள் பரிசீலித்து கூடுதல் தகவல் வேண்டுமெனில் எங்களை தொடர்பு கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

**உங்கள் பொறுப்புகள்**

- நாங்கள் இணைத்துள்ள அனுமதி கடிதத்துடன் உள்ளூர் காவல்துறையிடமிருந்து அனுமதி.
- நிகழ்ச்சி நடைபெரும் இடம் மற்றும் அனைத்து ஏற்பாடுகள்
- வீதி நாடக நிகழ்ச்சிக்கான பேனர் மற்றும் ஒலி சாதன ஏற்பாடுகள்
- அரசு அதிகாரிகள் நிகழ்ச்சியில் கலந்துகொள்ள அழைப்பது மற்றும் பங்கேற்பை உறுதிப்படுத்துவது
- மக்களை ஒருங்கிணைப்பது மற்றும் கூட்டத்தில் பங்கேற்பதை உறுதிசெய்வது.
- முக்கிய விருந்தினர்கள், கிராம பஞ்சாயத்து தலைவர் போன்றவர்களின் பங்கேற்பு
- உள்ளூர் ஊடகம் மற்றும் பத்திரிக்கையாளர்களின் பங்கேற்பு
- கலைக்குழுவுடன் ஒருங்கிணைந்து செயல்படுவது
- பார்வையாளர்களுக்கு கைப்பிரதிகளை வழங்குவது
- கலைக்குழு மற்றும் ஐதுஆ அமைப்பினர்களுக்கு தங்கும் வசதி ஏற்பாடு செய்வது
- நிகழ்ச்சியிக்கு பின் பார்வையாளர்களுக்கு தேனீர் ∴உணவு வழங்குவது
- செய்தித்தாளில் பிரசுரமாகும் கட்டுரைகள் ∴ செய்திகளை கண்டறிந்து அவற்றை ஐதுஆ-க்கு அனுப்புவது
- செலவு கணக்குகளை ஐதுஆ-க்கு சமர்ப்பிப்பது

**ஒப்புக்கொள்ளப்பட்ட வழிமுறைகள்**

**International Justice Mission®**
**Post Office Box 2583~Chetpet, Chennai-600 031 ~ Tamil Nadu**
**Office Phone (044) 2819-2293 ~ Fax (044) 4263 8191 ~ mobile +91 9003045307 ~ email: drachel@ijm.org**

IJM

இன்டர்நேஷ்னல் ஜஸ்டிஸ் மிஷன்

- ஊர்வலங்கள் நடத்தப்படமாட்டாது
- அரசு மீது விமர்சனமோ, குறையோ கூறப்படமாட்டாது
- கோஷங்கள் எழுப்பப்படமாட்டாது
- முதலாளிகளுக்கு எதிராக சர்ச்சைக்குரிய அறிக்கைகள் நேரடியாக வழங்கப்படமாட்டாது.
- மதம் சார்ந்த செயல்பாடுகள் எதுவும் நடத்தப்படமாட்டாது

கீழ்வரும் கூடுதல் ஆவணங்களும் உங்களது பரிசீலனைக்காக இத்துடன் இணைக்கப்பட்டிருக்கின்றன.

- அரசு அதிகாரி அழைப்பிதழ் மாதிரி கடிதம்
- பயணத்திட்டம்
- காவல்த்துறை அனுமதி கடிதம்
- ஒரு பக்க அறிக்கை
- பத்திரிக்கையில் வெளிவரும் செய்தி தொகுப்பு பதிவு செய்தல்
- ஐதுஆ தொடர்பு எண்
- பிரச்சாரத்தின் கை பிரதிகள்

இப்பிரச்சாரத்தில் உங்களது பொறுப்பு மற்றும் நமது சமூகத்திற்கு சேவையாற்ற வேண்டுமென்ற ஈடுபாட்டுக்காக மீண்டும் ஒரு முறை உங்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றிகளை தெரிவிக்கிறோம். உங்கள் நடவடிக்கையால் மட்டுமே கொத்தடிமை தொழில்முறையை முடிவுக்கு கொண்டுவரமுடியும்.

"கொத்தடிமை இல்லா தமிழகத்தை உருவாக்குவோம்"

தங்கள் உண்மையுள்ள,

டி. ரேச்சல் பிரசன்னா
சமூக தொடர்பு மேலாளர்

**International Justice Mission®**
**Post Office Box 2583~Chetpet, Chennai-600 031 ~ Tamil Nadu**
**Office Phone (044) 2819-2293 ~ Fax (044) 4263 8191 ~ mobile +91 9003045307 ~ email: drachel@ijm.org**